நேமம் கோவில்

குடமுழுக்கு விழா



மலர் விமரிசனம்

திருமதி தேவகி முத்தையா, M.A., M.Phil.

உ

சிவமயம்

ஏமமதை விலகுரவி யொளியே போற்றி !

இறைவி சௌந் தரிமாதுக் கிசைந்தாய் போற்றி !

சேமநிதி யேயருளே பொருளே போற்றி !

ஆமெனவோ மென்றெழுந்த அரனே போற்றி !

அம்பலத்தி னடனமிகு மரசே போற்றி !

நேமநகர் விளங்குசிவ சம்போ போற்றி !

நின்பாத மெனக்கருள்வாய் போற்றி !போற்றி !

இராம.அண்ணாமலை செட்டியார்

 30-1

உ
சிவமயம்

நேமங்கோவில் குடமுழுக்கு விழா மலர், வெளியீட்டு விழாவில் 31-7-93ம் தேதி திருமதி தேவகி முத்தையா M.A., M.Phil. அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவை, மலரின் விமரிசனமாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். மலரின் ஆசிரியர், பதிப்பாளர்களைப் பெருமைப் படுத்தும் வகையில், அவர்களுக்குப் பரிசுகள் வழங்க இணங்கி, விழாவில் பங்கு கொண்ட திருமதி தேவகி முத்தையா அவர்கள், ஒரு அருமையான இலக்கிய ஆராய்சியுரை ஒன்றை நிகழ்த்தி, மலர்க் குழுவினர் அனைவரையும் பெருமைப்படுத்தியுள்ளார்கள்.

மலரை முன்னரே படித்திருந்த பலர் மலரின் தன்மையையும், பெருமையையும், திருமதி தேவகி முத்தையா அவர்களின் பேச்சைக் கேட்ட பின்னர்தான் உணர முடிந்தது. மலரை முன்னரே படிக்காதவர்களுக்கு அவர்களது பேச்சு ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கி, மலரைப் படிக்க வேண்டுமென்ற உந்திப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது ஒரு ''பயனுடைய தொகுப்புப் பெட்டக மாக''வும் ''வழிகாட்டி நூலாக''வும் அமைந்துள்ளது என தேவகி முத்தையா அவர்கள் சொல்லியுள்ளது, மலருக்கு மட்டுமல்ல, மலர் பற்றிய அவர்கள் உரைக்கும் பொருந்தும் என்பதைக் கருத்திற் கொண்டு, மலர் வாங்கியவர்கள் அனைவருக்கும், திருமதி தேவகி முத்தையா அவர்களின் உரையை அச்சிட்டுக் கொடுக்க வேண்டும் என மலர்க்குழு அங்கத்தினர் V.N.C.T சிதம்பரம் செட்டியாரவர்கள் எண்ணத்தைச் செயல்படுத்தும் வகையில் இம்மலர் விமர்சனத்தைப் புத்தக வடிவில் அளிக்கும் வாய்ப்புக் கிடைத்தமையில் பெருமை கொள்கிறோம்.

சுப. சித. பழனியப்பன் — காரியதரிசி
மெ. மெய்யப்பன் — தலைவர்
மலர்க்குழு

30-1

நேமம் கோவில் குடமுழுக்கு விழா மலர் விமரிசனம்

திருமதி தேவகி முத்தையா, M.A.,M.Phil.

இன்று நடைபெற இருக்கும் விழாவிற்கு வருகை புரிந்துள்ள தவத்திரு குன்றக்குடியின் இளைய பட்ட சந்நிதானம் அவர்களுக்கும் உயர்திரு உமு.சுப.லெ. மெய்யப்ப செட்டியார் அவர்களுக்கும், உயர்திரு சே.வு.அ. அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கும், உயர்திரு மெ. மெய்யப்ப செட்டியார் அவர்களுக்கும், உயர்திரு வி.என். சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கும் டாக்டர் விஜயலட்சுமி நவநீத கிருஷ்ணன் அவர்களுக்கும், டாக்டர் கு. ஞானசம்மந்தம் அவர்களுக்கும் நியமம் காக்கும் நியமம் கோவிற் சகோதரர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் மற்றும் இந்த விழாவிற்கு வருகை புரிந்துள்ள பெரியோர்களுக்கும் தாய்மார்களுக்கும் நண்பர்களுக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

முருகப்பனில்லாத ஊருமில்லை - ஒரு
முத்தையனில்லாத வீடுமில்லை
பழனியப்பனின்றி வம்சமில்லை - எங்கள்
பரம்பரைக்கு அவனின்றி அம்சமில்லை

என்று பாடினார் கவியரசு கண்ணதாசன். 'ஓர்', 'ஒரு' என்னும் சொற்களுக்கு 'ஒப்பற்ற' என்னும் பொருளுமுண்டு. அவ்வகையில் இப்பாடலில் அமைந்த 'ஒரு' என்பதற்கு 'ஒப்பற்ற' என்ற பொருளையேற்றி 'ஒப்பற்ற' என் தலைவரான விழாத் தலைவர் டாக்டர் ஏ.சி.எம். அவர்களுக்கும் என் வணக்கத்தைக் கூறி என் உரையைத் தொடங்குகின்றேன்.

குடமுழுக்கு விழா மலர்க்குழுவின் செயலர் திரு. பழநியப்ப செட்டியார் அவர்களுக்கு நான் தனிப்பட்ட முறையில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்று இங்கு சிறப்புரை ஆற்றப்போகும் இருவருள் ஒருவர் கிராமிய இசைத் தென்றல் டாக்டர் திருமதி

விஜயலெக்ஷ்மி நவநீதகிருட்டிணனும் மற்றொருவர் நகைச்சுவைப் பேச்சாளார் டாக்டர் திரு. கு. ஞான சம்பந்தம் அவர்கள். இவர்கள் உரைக்கிடையில் நான் என்ன உரையாற்ற முடியும்? எனக்கு வசதியாக ஒரு Textual Topic அதாவது மலர் விமர்சனம் எனும் தலைப்பைக் கொடுத்தமைக்கு என் நன்றி.

மலர் விமர்சனத்திற்கு வருவோம். 74 தலைப்புகளோடும் 83 விளம்பரங்களோடும் மிகச் சிறப்பான முறையில் இந்த மலர் அச்சிடப் பெற்றுள்ளது. மிக நேர்த்தியாக அமைந்துள்ள இம்மலர் பற்றி உரையாற்றுவதை எனக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதுகின்றேன். இம்மலர் அமைப்பில் முதலாவதாக என்னைக் கவர்ந்தது இதன் Perfection. மலரின் பொருள்களைத் திறம்படச் சேகரித்துத் திரும்பத் திரும்பச் சரி பார்த்து அச்சிடச் செய்துள்ள Perfection மிகவும் பாராட்டுதற்குரியதொன்றாகும். கோவில் மற்றும் சுவாமி அம்மனின் வண்ணப்படங்கள் அழகுற அமைந்து கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

அடுத்ததாக நேமம் அருள்மிகு ஜெயங்கொண்ட சோளீஸ்வரர் எனும் பெயர் பற்றிய கருத்து. நேமம் நகரக் கோவில், நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஒன்பது பொதுக் கோவில்களில் பழமையானதும், புகழ் பெற்றதுமாகும். 'நியமம்' என்ற சொல்வழக்கு நேமம் என ஆகியிருக்கலாம். 'நியமம்' என்பது உயிரினும் பெரிதாக ஓம்பப் பெறும் ஒழுக்கம். ஒழுக்கத்தால் உயர்ந்த சான்றோர் பலர் வாழும் ஊர் இது என்பது பிரசித்தம் எனும் செய்தி மலர்க் கட்டுரையினின்று பெறப்பெறும் செய்தி.

நேமம் அருள்மிகு ஜெயங்கொண்ட சோளீஸ்வரர் குடமுழுக்கு விழா மலர் தெய்வமணம் கொண்ட செய்யுள்களோடும், திருப்பெருகு சிவஞானம் உணர்த்தும் கட்டுரைகளோடும் சிறந்த தமிழ்ப் பனுவலாய் மலர்ந்திருக்கின்றது. இவ்வுண்மை குடமுழுக்கு விழாமலரைக் காணும் போது நன்கு புலப்படுகின்றது.

மூன்றாவதாக, இதில் ஜெயங்கொண்டார் சதகம், நேமம் கோவில் வரலாறு, தலபுராணம், சிற்பங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியன நேமம் பற்றிய வரலாற்றுத் தொகுப்பாய் அமைந்துள்ளன.

''நகரக்கோயில் புராணங்களும் நகரத்தார் வரலாறும்'' (பக்கம் 75) என்னும் கட்டுரை ஓர் ஆராய்ச்சியுரைக்கு ஆய்வேட்டிற்கு - அடித்தளமாய் அடியெடுத்துக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது.

''சைவமும் தமிழும் தழைத்தோங்க இந்நாட்டில் ஒரு சமூகம் உழைத்து வருவதைக் குறிப்பிட வேண்டுமானால் அந்தச் சமூகம் தனவணிக சமூகம் என்றே கூறலாம். ஒரு தேசத்துக்குக் கோட்டைக் காப்பு வீரர்கள் இருப்பது போல, இந்து மதம் எனும் கோட்டைக்கு தனவணிக நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் கோட்டைக் காப்பு வீரர்களாக இருந்து வருகின்றார்கள்'' (வரலாறு படைக்கும் நேமங்கோயில் - வி.என். சிதம்பரம் செட்டியார் - பக்கம் 79)

இவ்வாசகம் 1922-ஆம் ஆண்டில் காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகள் கானாடுகாத்தானில் பேசும்பொழுது குறிப்பிட்ட வாசகம். அன்னார் இவ்வாசகத்தைக் கூறி ஏறத்தாழ 70 ஆண்டுகள் ஆன பின்பும், காலமும் மனிதரும் எவ்வளவோ மாற்றத்திற்கு உட்பட்டும் கூட பெரியவர் நம் சமூகத்தினரிடம் அதே வாஞ்சையை - தனியன்பை வைத்திருப்பதை நான் கண்கூடாகக் காணுகின்றேன். இந்த நல்ல நேரத்தில் அம்மகானை நன்றியோடு நினைத்து இருகரம் கூப்பி வணங்குகின்றேன்.

மேற்காணும் இந்த வாசகத்தை நினைவுறுத்தித் தொடங்குகின்றது. ''வரலாறு படைக்கும் நேமங்கோயில்'' என்னும் தலைப்பமைந்த கட்டுரை. இதிலிருந்து நமக்குச் சில எடுப்பான கருத்துக்கள் எதிரொலிக்கின்றன. முப்புரங்களைச் சிரித்துச் செயங் கொண்டதாலும், மன்மதனை எரித்துச் செயங் கொண்டதாலும் இத்தலத்தில் இறைவன் ஜெயங்கொண்ட சோளீசர் என்னும் திருநாமம் பெறுகின்றார் என்பது

அருமையான செய்தி. சிறப்பாக வழிபடும் மூர்த்தியாக வயிரவப் பெருமான் விளங்குகிறார் என்பதும் இறைவன் கிழக்குப் பார்த்தும், அம்மை தெற்குப் பார்த்தும் வயிரவர் மேற்கேபார்த்தும் அமர்ந்திருப்பது இந்த ஆலயச் சிறப்பாகும் என்பதும், அகத்தியர் வழிபட்ட திருத்தலம் என்பதும் அரிய செய்திகளாக அமைந்து நமக்குப் பரவசமூட்டுகின்றன.

சிற்றிலக்கிய வகையில் சதக இலக்கியம் பெற்றிருப்பது ஏனைய நகரக் கோயில்களுக்கில்லாது நேமம் செயங்கொண்ட சோழீசர் கோயிலுக்கு அமைந்த தனிச்சிறப்பாகும். அதையும் கல்விக்கு உரையாணி என்று பாராட்டப் பெற்ற முத்தப்பர் - ஏழு நகரத்தார் எல்லாம் நமதடியார் என்று பாடிய முத்தப்பர் - சைவமும் தமிழும் வளர்க்கும் தனவணிக மரபுக்கே முன்னோடியாகத் திகழ்ந்த அன்னார் செயங்கொண்டார் சதகம் பாடியிருப்பது நன்றியோடு நினைக்கத்தக்கது. ஏனெனில் சிவபெருமானைப் போற்றிப் பாடும் பாடாண்பாட்டாக சிவபெருமான் துதிநூலாக அமைந்துள்ளது. செயங்கொண்டார் சதக வரலாறு என்னும் கட்டுரையும் அதை ஒட்டி செயங்கொண்டார் சதகம் — அதன் original form அதாவது முழுவடிவமும் இம்மலரில் அச்சிடப் பெற்றிருப்பது பாராட்ட வேண்டிய ஓர் அம்சமாகும். 'செயங்கொண்டார் சதகம் பாடப் பெற்றது' என்று மட்டும் சொன்னால் அதைத் தேடுவார் சிரமப்படுவார். இங்கு 'ரெடி ரெக்கனர்' என்னும் முறையில் அந்நூலையே அச்சில் கொண்டு வந்திருப்பது உள்ளங்கை நெல்லிக்கனியாக எடுப்பாக உள்ளது.

ஆகவே, இந்நூலைப் பற்றி இதுவரை யாரும் ஆய்வுக்குத் தலைப்பாக எடுத்துக் கொள்ளவில்லை யென்றால் தனி முறையில் ஓர் எம்ஃபில் ஆய்வுக்கு உட்படுத்தும் அளவுக்கு அது அமைந்திருப்பது நான் காணுகின்றேன். நானே ஓர் ஆய்வாளருக்குத் தலைப்பாக இதைப் பரிந்துரை (suggest) செய்வேன். அந்த உறுதியை என் உள்ளத்தே எழுப்புவது இம்மலர் அமைப்பேயாகும்.

அதேபோல 14.1.1961-ல் அரங்கேற்றப் பெற்ற 'நேமம் தல புராணமும், அருள்மிகு ஜெயங்கொண்ட சோழீசர் பதிகமும்' இம்மலரில் இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது (ப.63; ப.81)

'நியமம் மிகுந்த நேமங்கோயில்' என்னும் தலைப்புடைய கட்டுரை (ப.85) சிறந்த சொற்பொருள் விளக்கத்துடன் சிறந்ததோர் ஆராய்ச்சிக் கட்டுரையாக அமைந்திருப்பதைக் காணுகின்றேன்.

'விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்' என்பதை (ப.89) 'செயங்கொண்ட விநாயகர்' என்னும் தலைப்புடைய கட்டுரை தெளிவுபடுத்துகின்றது.

'செட்டிநாட்டில் சிவபெருமான்' என்னும் கட்டுரை ஒரு (ப.99) சொல்லாராய்ச்சிக் கட்டுரையாக விளங்குகின்றது.

அறம் என்றால் தருமம்; விடை என்றால் எருது. இவ்வாறு தருமமே எருது வடிவில் அறிவிடையாகச் சிவபெருமானுக்கு ஊர்தியாயிற்று என்பதை எடுத்துக் காட்டுகின்றார் கட்டுரையாசிரியர். 'எருது' என்னும் ஒரு சொல்லுக்குப் பெற்றம், ஆ, விடை, சே, காளை என்னும் பல சொற்களுள் இதையும் கூறி, பெற்றத்தை ஊர்தியாகக் கொண்டு ஆளுபவன் 'பெற்றாச்சி'. 'ஆ' வானை இச்சித்து - அதாவது விரும்பி ஏற்பவன் ஆவிச்சி, ஆவினைத் தனக்கு உடைமையாக உவந்து ஏற்றவன் ஆவுடையப்பன்.

சேகு அப்பன் - சேக்கப்பன்

காளை அப்பன் - காளையப்பன்

நாகு அப்பன் - நாகப்பன்

(நாகு என்பது பசுவினைக் குறிக்கும்)

இதிலிருந்து செட்டிநாட்டு வழக்கிலுள்ள பெத்தாச்சி, சேவுகன் செட்டி, சேக்கப்பன், காளையப்பன், நாகப்பன், ஆவிச்சி, ஆவுடையப்பன் போன்ற பெயர்கள் நம்மவர்களுக்குச் சிவத்தின்பால் உள்ள ஆழ்ந்த ஈடுபாட்டை உணர்த்துகின்றன அன்றோ ? (ப.100) எனக்கேட்கும் போது 'நாம் நினையாத முன் வந்து

நிற்பினும் நிற்கும் எனையாளும் ஈசன் செயல்' என்பதை நன்கு புரிந்து கொள்ளுகின்றோம்.

'செல்லரித்த மனதிற்குத் துணையாய் நிற்க
சிவனன்றி எவனுண்டு மக்கள் தம்மை
நல்வழிக்கு அவனின்றி உதவி இல்லை
நன்கறிந்து பற்றுங்கள் சிவனின் பாதம்'

என இம்மலரில் ''நன்கறிந்து பற்றுங்கள் சிவனின் பாதம்'' என்னும் தலைப்பில் அமைந்த கவிதை அடிகளே கூட நான் மேற்சொன்ன கருத்துக்கு ஆதாரமாகின்றது. நாம் சிவனின் நாமத்தை நம்மையறியாமலும், நன்கறிந்தும், மக்கட்கு இட்டு வழங்குகின்றோம் எனத் தெளிகின்றோம்.

பைரவர் சன்னதிக்கு நேரே உள்ள பீடம் பற்றிய கட்டுரை *(ப.114, ·115)* நேமங்காளி மக்கள் வழக்கில் வழங்கிய வரலாற்றைத் தெளிவாக்குகின்றது.

'எந்த ஒரு பொருளும் இருப்பதற்கு ஓர் இடம் தேவை' என்பதை எடுத்துக் காட்டி விளக்குகின்றது 'மண்ணின் மைந்தர் செயங்கொண்டார்' என்னும் கட்டுரை *(ப.123-125)*

''நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபினர் என்று நாம் பெருமை கொள்ளும் அவதாரப் பெருமக்கள் (1) அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான இயற்பகையாரும் 2) கைலாச மலைக்குத் தலையால் நடந்து சென்று இறைவனால் 'அம்மையே' என்று அழைக்கப் பெற்ற காரைக்கால் அம்மையாரும் (3) பட்டினத்தடிகளும் (4) வெட்டுண்ட கணவனை எழுப்பிய கற்பின் தெய்வம் கண்ணகியும் ஆவர்.''

எனும் கூற்று ''நாட்டுக்கோட்டை நகரத்தார் - செட்டியார் நல்லியல்புகள்'' என்னும் தலைப்புடைய கட்டுரையில் வருகின்றது *(ப.126-130)* 'காரைக்கால் அம்மையாரும் நகரத்தார் மரபினர்' என்பது என்னுடைய ஆய்வுக்கு அரண் செய்யும் கருத்து என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்றேன்.

''நூற்களஞ்சியம் ரோஜா முத்தையா'' என்னும் கட்டுரை (ப.131-134) காலத்திற்கேற்ற பயனுடைய கட்டுரையாகும். ஆராய்ச்சி மாணவர்களுடைய ஓர் அரிய பொக்கிஷமாகும். ஒரு பல்கலைக்கழகம் ஆற்ற வேண்டிய பணியை ஒரு தனி மனிதர் சாதித்திருக்கும் சாதனை வியத்தற்குரியது; போற்றுதலுக்கும் நன்றி பாராட்டுதலுக்கும் உரியதாகும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

நகரத்தார் பற்றிய கணிப்பினைக் கவிஞர் நாரா. நாச்சியப்பன் நல்ல வண்ணம் கவி பாடியுள்ளார் (ப.158)

''கடுகளவு பொருளேனும் வீணாய் போனால்
கலங்கிடுவார் மனம் பதைப்பார் புண்ணியத்தைத்
தொடுகின்ற செயற்கென்றால் கோடி கோடி
தொகுத்ததெல்லாம் ஒரு நொடியில் மனம் கனிந்து
கொடுத்துவிடும் வள்ளன்மை உடையார் அன்பு
குடிகொண்ட நெஞ்சத்தார் வையமெல்லாம்
தடுத்தாலும் நேர்மை வழி மாறா தேகும்
தகைமையுடையார் நகரத்தார் என்றும் வாழ்க!''

இப்பாடலில் கூறியுள்ள நகரத்தாரின் தன்மையைப் போலவே இம்மலரிலும் கடுகளவு இடமும் வீணாகப் போகாமல் அழகிய முறையில் தெளிவாகவும், பயனுடையதாகவும், அருமையாகவும் அச்சிட்டிருக்கும் வகைமையை எத்துணை பாராட்டினாலும் தகும்! ஒரு பயனுடைய தொகுப்புப் பெட்டகமாக - ஒவ்வொரு வீட்டிலும் வைத்து, வரும் சந்ததியினர்க்கு வழி காட்டத்தக்க ஒரு வழிகாட்டி நூலாக (guide) சேமவைப்பு நிதியாக (safe vault deposit) கருதக்கூடிய சிறப்புடன் இம்மலர் அமைந்துள்ளதைப் பாராட்டி, என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

''பயங்கொண்ட பலரெல்லாம் பணியக் கண்டு
பாவங்கள் பொடியாக்கி வினையை வென்று
செயங்கொண்ட சோழீசர் நேமம் கோவிற்
செழும் பொருளைத் தினந்தோறும் சிந்தை செய்வோம்''

என்னும் காப்பியக் கவிஞர் நா. மீனவனின் இம்மலரில் இடம் பெற்ற கவிதையை என்னுரைக்கு முத்தாய்ப்பாக்க நினைக்கின்றேன்.

அதற்கும் மேலே,

''செயங்கொண்ட சோழீசர்க்குகந்த மங்கை
செங்கமல நாயகியாள் சௌந்த ரத்தின்
வயங்குபொன் திருவடிகள் பணிந்து வாழ்வோம்
வாழவழி வகை செய்வாள் வணங்கி நிற்போம்''

என்னும் பரஞ்சோதி முனிவரின் பாடலைப் பணிந்து சொல்லி முடிக்கின்றேன்.

உ

சிவமயம்

நெறிகொண்ட திண்மையும் நிறைகொண்ட உண்மையும்

நீங்கா திருக்க அருள்வாய்!

நித்தம் வறி யார்க்குதவு சித்தம் கொடுத்துதவி

நிலையுயர என்றும் அருள்வாய்!

சரிவென்று மில்லாத சன்மார்க்கம் தந்துமனச்

சாந்திபெறும் நிலையும் அருள்வாய்!

சகலவுயிர் களுமுனது அபயகர வரமுதவத்

தலைநிமிரும் வகையும் அருள்வாய்!

குறையின்றி எவ்வுயிரும் இரைகொண்டு பசியாறிக்

கொள்கின்ற வளமும் அருள்வாய்!

கூடாத சாதிமதக் கேடால் வருந்துயர்கள்

கொள்ளாத நலமும் அருள்வாய்!

திரைகொண்ட ஆழியுள் உறைகின்ற மால்தங்கை

சிந்தைக் கிசைந்த கனியே!

சீர்சௌந் தரவன்னை பங்கனே! எமையாளும்

ஜெயங்கொண்ட சோழீ சனே!

கவிஞர் மு.நா.நாராயணன்